வாக்குமூலம்

உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், மாதவரம்.

வழக்கு எண். CC 50/2020

வழக்கு சாட்சி LW11 / PW11

| பெயர் | பாஸ்கர் | ஜாதி | |
|---|---|---|---|
| கணவர்/தந்தை | C/o. ஜரும் மார்ட்டின்<br>த/பெ. சேவியர் ரத்தினம் | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | 55 |

தேதி 05.04.2025

எதிரிகள் ஆஜர் இல்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

சாட்சி சத்தியபிரமாணம் செய்யப்பட்டார்.

**முதல் விசாரணை**

நான் திண்டுக்கல் பகுதியில் வசித்து வருகிறேன். நான் திண்டுக்கல் திருவள்ளுவர் சாலை கே.கே. காம்ப்ளக்ஸில் சூர்யா கலர் லேப் புகைப்படம் எடுக்கும் ஸ்டூடியோ வைத்திருக்கிறேன். தேதி, மாதம் ஞாபகம் இல்லை. 2013ம் ஆண்டு கடைசியில் என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள நபர்கள் என்னுடைய கடைக்கு புகைப்படம் எடுக்க வந்தார்கள். நான்தான் புகைப்படம் எடுத்தேன். மேற்படி புகைப்படமானது எங்களுடைய ஸ்டுடியோவில்தான் எடுத்தது. மேற்படி புகைப்படமானது அ.சா.ஆ. ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் புகைப்படம் எடுத்ததற்கான சூர்யா கலர் லேப் பண ரசீதானது எங்களுடைய லேபில் வழங்கியதுதான். மேற்படி ரசீதானது அ.சா.ஆ. ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை இவ்வழக்கு சம்மந்தமாக என்னிடம் விசாரணை செய்தார்கள். நான்தான் புகைப்படம் எடுத்தேன் என்று கூறினேன். நெகடிவ் கேட்டார்கள். நான் டிஜிட்டல் கேமரா என்பதால் நெகடிவ் இல்லை என கூறி சிடியில் மேற்படி புகைப்படத்தினை காப்பி செய்து கொடுத்தேன். வேறு எந்த விபரமும் எனக்கு தெரியாது.

**வழக்குறிஞர் ஆஜராகியும் குறுக்கு விசாரணை செய்யப்படாததல் குறுக்கு விசாரணையானது முடிக்கப்பட்டது.**